# COVID-19 நோய்த்தொற்று இன்னும் 5 ஆண்டுகள்வரை கூட நீடிக்கலாம் : அமைச்சர் லாரன்ஸ் வோங்

***Seithi Mediacorp*, 25 January 2021**

COVID-19 நோய்ப்பரவல் முடிவுக்கு வர இன்னும் 4 முதல் 5 ஆண்டுகள்வரை கூட ஆகலாம் என்று, அமைச்சுகளுக்கு இடையிலான COVID-19 பணிக்குழுவின் இணைத் தலைவரும் கல்வியமைச்சருமான திரு. லாரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

கொரோனா கிருமித்தொற்று, ஒரு கட்டத்தில் மறைந்துபோகவே செய்யும்.

ஆனால், அது முடிவுக்குவந்து கோவிட்டுக்குப் பிந்திய இயல்பு நிலைக்கு உலகம் திரும்பத் தொடங்க, சுமார் 5 ஆண்டுகள்வரை ஆகலாம் என்றார் அவர்.

அதேபோல், நோய்த்தொற்றுக்குப் பிந்திய உலகம் எப்படி இருக்கும் என்பதையும் எவராலும் கணிக்க முடியாது என்றார் திரு. வோங்.

கொள்கை ஆய்வுக் கழகம் (Institute of Policy Studies) நடத்திய "கண்ணோட்டங்கள் 2021" என்னும் 4 நாள் கருந்தரங்கின் இறுதிநாளான இன்று (ஜன 25) அவர் உரையாற்றினார்.

இன்னும் நிச்சயமற்ற சூழல் நிலவுவதால்,
முகக்கவசங்கள் அணிவது, கூட்டம் சேருவதைத் தவிர்ப்பது போன்ற நடவடிக்கைகள் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டின் பெரும்பகுதியிலும் நீடிக்கலாம் என்றார் அவர்.

தற்போது உலக நாடுகளில், தடுப்பூசி போடும் பணி நடந்து வருவதால், அனைத்துலகப் பயண நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கக்கூடும்.

ஆனால், உலக மக்கள் அனைவருக்கும் விரைந்து தடுப்பூசி போடும் பணி எளிதானதல்ல என்பதை அவர் நினைவுகூர்ந்தார்.

சிங்கப்பூரில் உள்ள அனைவருக்கும் இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டுக்குள் தடுப்பூசிகள் போடப்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கொரோனா கிருமி, தொடர்ந்து உருமாற்றமடைந்து வருவதால், சளிக்காய்ச்சலுக்குப் போட்டுக்கொள்வதுபோல ஆண்டுதோறும் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் நிலை ஏற்படக் கூடுமென்றும் திரு. வோங் கூறினார்.

மொத்தத்தில், உலகிலுள்ள அனைவருமே பாதுகாப்புப் பெறும்வரை எந்தவொரு தனி மனிதருக்கும் பாதுகாப்பு இல்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.